The Hindu (English)
Dated: 27.02.2025

# Govt. questions pleas for lifetime ban on convicted politicians

**Krishnadas Rajagopal**
NEW DELHI

The Centre has questioned the logic behind the demand for a lifetime ban on convicted politicians from contesting elections or being nominated to Parliament or State legislatures.

It said that prison sentences or punishments under penal law are for a specific period, say a few years, after which convicts regain their rights and are prompted to rejoin society.

The Centre was responding to pleas, including one by advocate A.K. Upadhyay, seeking a lifetime ban on convicted politicians from contesting elections.

It had filed a similar affidavit in December 2020, maintaining that disqualification under Section 8 of the Representation of the People Act of 1951 for the period of prison sentence and six years thereafter was enough punishment



The Centre reasoned that penal punishments largely tend to be finite in quantum and time.

for errant or criminal legislators. But, on February 10, the top court said there was an apparent conflict of interest if people found guilty of breaking the law return as lawmakers.

"Once convicted, how can people come back to Parliament and legislatures? There is an apparent conflict of interest," Justice Dipankar Datta, heading a Bench comprising Justice Manmohan, had observed.

**CONTINUED ON**
**» PAGE 10**

## Govt. questions pleas seeking lifetime ban

In its latest affidavit filed on February 24, the Centre reasoned that penal laws impose a restriction on freedoms and rights of persons only for a specific period, that is, the time of prison sentence. These restrictions cease to operate automatically. The Centre indicated that banning a person, who has served his time in jail for an offence, from contesting elections or re-entering politics for life would be unduly harsh, disproportionate and excessive.

"By confining the operation of the penalty to an appropriate length of time, deterrence is ensured while undue harshness is avoided... The petitions fail to make a crucial distinction between the basis of disqualification and the effects of disqualification. The basis of disqualification is conviction for an offence. But the basis of the disqualification becomes non-existent when the period of the conviction ends," the Union government countered in its affidavit.

Besides, the government said imposing a life ban would amount to rewriting Section 8 by replacing 'six years' with 'life-long'. The Supreme Court cannot legislate. That was entirely the domain of Parliament.

"A lifetime disqualification is the maximum that can be imposed under the provisions and to impose such a disqualification is certainly within the power of Parliament... It is trite law that courts cannot direct Parliament to make a law or to legislate in a particular way," the government affidavit noted.

Deccan Chronicle

Dated: 27-02-2025

# PARLIAMENT TO DECIDE ON LIFE BAN ON CONVICTED PEOPLE FROM POLLS: CENTRE

DC CORRESPONDENT
NEW DELHI, FEB 26

In an affidavit filed before the Supreme Court, the Union government has opposed a plea seeking a lifetime ban on convicted politicians, contending that the question of imposing such a disqualification was solely within the domain of Parliament.

The government said the prayer in a plea, seeking a lifetime ban on convicted politicians, amounted to re-writing of the statute or directing Parliament to frame a law in a particular manner which was beyond the scope of judicial review.

"The question whether a lifetime ban would be appropriate or not is a question that is solely within the domain of Parliament," the affidavit said, adding that by confining the operation of penalty to an appropriate length of time, deterrence was ensured while undue harshness was avoided.

P7

# 'Lifetime ban on convicted legislators in Parl domain'

FROM PG 1

On February 10, the apex court sought responses from the Centre and the Election Commission on the challenge to the constitutional validity of Sections 8 and 9 of the Representation of People Act.

The Centre, in its affidavit, further underlined that the apex court had consistently held that the legislative choice over one option or the other could not be questioned in courts over its efficacy or otherwise.

Under Section 8 (1) of the Representation of the People Act, 1951, the period of disqualification was six years from the date of conviction or in case of imprisonment, six years from the date of release, it added.

"The disqualifications made under the impugned sections are limited by time as a matter of parliamentary policy and it would not be appropriate to substitute the petitioner's understanding of the issue and impose a lifetime ban," it said.

"The Constitution has left the field open to Parliament to enact such further law governing disqualifications as it deems fit. Parliament has power both to determine the grounds for disqualification and the duration of disqualification," it said.

The Times Of India

Dated: 27.02.2025

# ECI reviews in Madurai

Chief Election Commissioner of India Gyanesh Kumar, reviewing election preparations in Madurai on Wednesday, emphasized that voting is the first step toward national service. He urged all eligible citizens aged 18 and above to register and vote. Accompanied by TN chief electoral officer Archana Patnaik, Kumar held a review meeting with Madurai collector M S Sangeetha, city police commissioner J Loganathan, and other senior officials. They briefed him on the district's electoral arrangements.

The Times Of India
Dated: 27.02.2025

# In SC, Centre opposes life ban on convicted politicians

## 'Nothing Wrong With Current Six-Year Poll Bar'

AmitAnand.Choudhary
@timesofindia.com

New Delhi: Opposing a plea to turn the six-year disqualification for convicted persons from contesting polls into a lifelong ban, Centre has told Supreme Court that the present law was constitutionally sound and it should be left to Parliament to decide on amending the law, and that the judiciary should refrain from passing direction.

In an affidavit filed in SC, the Centre argued that there was nothing wrong in imposing time-bound penalty as other grounds for disqualification — such as holding an office of profit, unsoundness of mind, insolvency and not being a citizen of India — were not permanent but time-bound and disqualification was tied to the existence of a supervening circumstance.

> Numerous laws provide for **penalties limited by time,** in the same manner as in the impugned (Representation of the People) Act... **By confining the operation of the penalty to an appropriate length of time, deterrence is ensured while undue harshness is avoided...**
>
> **— Centre's affidavit in SC**

According to Section 8 of Representation of the People Act, the period of disqualification kicks in six years from the date of conviction or in case of imprisonment, six years from the date of release. Challenging the provision, advocate Ashwini Upadhyay, now with BJP, filed a petition seeking SC's direction to do away with time-bound penalty and bar a convicted person for life from contesting MP/MLA election, forming a political party or becoming office-bearer of a political party.

**Judicial scrutiny of lawmakers' penalty?**

SC has laid down guidelines for constitutional courts to scrutinise the proportionality of punishment awarded to an errant member by a legislature, permitting judicial scrutiny of the penalty. Tuesday's verdict breaks through a self-imposed restraint to extend the court's jurisdiction to a matter traditionally considered the legislatures' domain. **P 10**

Disputing the contention, the Centre said, "Disqualifications made under the impugned sections are limited by time as a matter of parliamentary policy and it would not be appropriate to substitute the petitioner's understanding of the issue and impose a lifetime ban. As a matter of judicial review, the court can declare the provisions to be unconstitutional and declare them to be inoperative, however, the relief that he is seeking amounts to rewriting of the provision as it effectively seeks to read 'lifelong' instead of 'six years' in all sub-sections of Section 8 of the Act. The said approach is unknown to judicial review and unknown to any canon of constitution law."

The govt said whether a lifetime ban would be appropriate or not was a question within the domain of Parliament. "Numerous laws provide for penalties limited by time, in the same manner as in the impugned Act. It is submitted that this is in line with well-established principles governing penal law. By confining the operation of the penalty to an appropriate length of time, deterrence is ensured while undue harshness is avoided," the affidavit said.

▶ **Max that can be done, P 10**

# 'Lifetime disqualification is max that can be done'

▶**From P 1**

The affidavit added, "The issues raised by the petitioner have wide-ranging ramifications and clearly fall within the legislative policy of Parliament and the contours of judicial review would be suitably altered in such regard. This court has consistently held legislative choice over one option or the other cannot be questioned in courts over its efficacy or otherwise."

"A lifetime disqualification is the maximum that can be imposed under the provisions and to impose such a disqualification is certainly within the power of Parliament. However, it is one thing to say that a power exists and another to say that it must necessarily be exercised in every case. The prayer of the petitioner amounts to rewriting of the statute or directing Parliament to frame a law in a particular manner which is wholly beyond the powers of judicial review. It is trite law that courts cannot direct Parliament to make a law or to legislate in a particular way," the affidavit said.

The New Indian Express

Dated: 27.02.2025



CEC Gyanesh Kumar at the Meenakshi Amman Temple in Madurai | K K SUNDAR

# Voting first step towards national service: CEC

EXPRESS NEWS SERVICE
@ Madurai/Ramanathapuram

THE first step towards national service is voting, said Chief Election Commissioner of India Gyanesh Kumar during a press meet at the Circuit House in Madurai on Wednesday.

Gyanesh Kumar conducted a review meeting with officials, and told media persons that all citizens of India who have completed 18 years of age should become electors and must always vote. "The Election Commission of India will always stand with the voters. I have reviewed the electoral process of Madurai, and they have done good work," he said.

Tamil Nadu Chief Electoral Officer Archana Patnaik, District Collector M S Sangeetha, Police Commissioner J Loganathan, Additional Collector Dr Monika Rana, Corporation Commissioner Chithra Vijayan, Superintendent of Police BK Arvind, and other officials participated in the meeting.

**CEOs meeting on March 4, 5**

In the presence of Ramanathapuram District Collector Simranjeet Singh Kahlon, Gyanesh Kumar said that he had a good review of the electoral processes in Madurai. A detailed review meeting was held in Ramanathapuram, with many suggestions from the collectors and SPs of both districts.

"I have asked the Chief Electoral Officer to compile all the suggestions ahead of the meeting with all CEOs on March 4 and 5 in Delhi. Gyanesh Kumar later visited the Meenakshi Amman Temple and the Ramanathaswamy Temple in Rameswaram.

The New Indian Express

Dated: 27.02.2025

# Govt draws turf line on banning convicted MPs

SUCHITRA KALYAN MOHANTY
@ New Delhi

The Centre on Wednesday filed an affidavit in the Supreme Court opposing the demand for lifetime ban on convicted MPs/MLAs from contesting polls, saying the "issue falls within legislative policy of parliament and not courts".



The reply came after the SC sought the views of the government and the Election Commission on a PIL. The court will hear the plea on March 4.

The Centre said, the existing laws are constitutionally sound and do not suffer from vice of excess delegation. A lifetime disqualification is "certainly within the power of Parliament, and not of courts," the government said.

"As a matter of judicial review, the court can declare the provisions to be unconstitutional and declare them to be inoperative, however, the relief that the petitioner is seeking amounts to re-writing of the provision as it effectively seeks to read life-long, instead of six years, in all subsections of section 8 of Representation of the People Act, 1951," the government said in its affidavit.

D.T.Next, Dated: 27-02-2025

# Real growth only when voters shun caste, religion, says court

**CHENNAI: Observing that in a diverse country like India, changes will not happen overnight, the Madras High Court held that growth and development are possible only when voters and politicians refrain from casting votes and contesting elections based on the grounds of caste or religion.**

Though India is a 75-year-old democratic country, its system is still in its infancy and we can only hope that things will change if the stakeholders, people, and politicians stop adhering to caste and religious preferences in elections, held a division bench of Justice R Subramanian and Justice G Arul Murugan while dismissing a plea.

Petitioner Rajesh Anouar Mahimaidoss moved the HC seeking to direct the Election Commission of India (ECI) to establish a system to disseminate to the voters and candidates contesting elections the Supreme Court's judgment in Abhiram Singh vs CD Commachen case. Corrupt practices described under section 123 (3) of the Representation of People Act (1951) stating that no candidates or his agents are allowed to induce voters to vote based on religion, caste, race, language, and community, should be widely publicised among voters through social media platforms, sought the petitioners.

He also sought the court to appoint an independent commission comprised of retired judges and human rights activists for the effective implementation of the apex court order in the Abhiram Singh vs CD Commachen case, which clarified section 123 (3) of the RP act and held that the candidates inducing voters based on religion, caste, race, language, and community is a corrupt practice.

As the ECI filed an affidavit stating that the polling body has been doing its best to achieve optimum turnout in the elections and also to ensure that the campaign in the election is not based on religion and caste, the petition was dismissed.

D.T. Next

Dated: 27.02.2025

# 'Life ban on convicted lawmakers solely in Parliament's domain'

**NEW DELHI: The Centre has opposed in the Supreme Court a plea seeking life ban on convicted politicians, saying imposing such a disqualification was solely within the domain of Parliament.**

In an affidavit filed in court, the Centre said the prayer in a plea, seeking the same, amounted to re-writing of the statute or directing Parliament to frame a law in a particular manner which was wholly beyond the powers of judicial review.

"The question whether a lifetime ban would be appropriate or not is a question that is solely within the domain of the parliament," the affidavit said.

By confining the operation of penalty to an appropriate length of time, deterrence was ensured while undue harshness was avoided, it added.

There was, said the Centre, nothing inherently unconstitutional in limiting the effect of penalties by time and it was a settled principle of law that penalties were limited either by time or by quantum.

"It is submitted that issues raised by the petitioner have wide ranging ramifications and clearly fall within the legislative policy of Parliament and the contours of judicial review would be suitably altered in such regard," the affidavit said.

The plea in the top court filed by advocate Ashwini Kumar Upadhyay seeks a life ban on convicted politicians aside from the expeditious disposal of criminal cases against MPs and MLAs in the country.

In its affidavit, the Centre underlined that the apex court had consistently held that the legislative choice over one option or the other couldn't be questioned in courts over its efficacy or otherwise.

The Union government said as a matter of judicial review, the court could declare the provisions to be unconstitutional, however, the relief sought by the petitioner effectively sought to read 'life-long' instead of 'six years' in all sub-sections of Section 8 of the Act.

The Hindu (Tamil)

Dated: 27.02.2025

# வாக்காளர் நலனுக்காகவே தேர்தல் ஆணையம் செயல்படுகிறது

## தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் உறுதி




மதுரையில் செய்தியாளர்களுக்கு நேற்று பேட்டியளித்த இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார். உடன், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், மதுரை ஆட்சியர் சங்கீதா உள்ளிட்டோர்.

மதுரை

எப்போதும் வாக்காளர்கள் நலனுக்காகத்தான் தேர்தல் ஆணையம் செயல்படுகிறது என்று இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தெரிவித்தார்.

மதுரைக்கு நேற்று காலை விமானம் மூலம் வந்த ஞானேஷ்குமார், அழகர்கோவில் சாலையில் உள்ள அரசு சுற்றுலா மாளிகையில் நடைபெற்ற, 10 தொகுதிகளுக்கான தேர்தல் பணி தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்றார். இதில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்ட அளவிலான அதிகாரிகள் பங்கேற்றனர்.

பின்னர் ஞானேஷ்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மதுரையில் தேர்தல் பணி தொடர்பாக, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி உள்ளிட்ட அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தினேன். 18 வயது பூர்த்தியடைந்த அனைவரும் தேர்தலில் வாக்களிப்பது ஜனநாயக கடமையாகும். வாக்களிப்பது குறித்து தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம்.

மதுரையில் தேர்தல் பணி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்திய தேர்தல் ஆணையம் எப்போதும் வாக்காளர்கள் நலனுக்காகத்தான் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

இந்தக் கூட்டத்தில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மாநகர காவல் ஆணையர் ஜெ.லோகநாதன், கூடுதல் ஆட்சியர் மோனிகா ராணா, மாநகராட்சி ஆணையர் சித்ரா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர், இந்திய தலைமை தேர்தல் ஆணையர், தனது மனைவியுடன் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தனர். பின்னர் கார் மூலம் ராமேசுவரத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

The Hindu (Tamil)
Dated: 27.02.2025

தண்டனை பெற்றவர்களுக்கு வாழ்நாள் தடை என்பது மிகவும் கடுமையானது

# தேர்தலில் போட்டியிட 6 ஆண்டு தடையே போதுமானது

## உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு பதில்

புதுடெல்லி

தண்டனை பெற்ற அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிட 6 ஆண்டுகள் தடை விதிப்பதே போதுமானது என்றும் வாழ்நாள் தடை விதிப்பது கடுமையானது என்றும் உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் அஸ்வினி குமார் உபாத்யாயா ஒரு மனு தாக்கல் செய்துள்ளார். அதில், "குற்றவியல் வழக்குகளில் தண்டனை பெற்ற அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிட வாழ்நாள் தடை விதிக்க வேண்டும். எம்.பி. எம்எல்ஏ-க்கள் மீதான குற்ற வழக்குகளை விரைந்து விசாரித்து முடிக்க உத்தரவிட வேண்டும்" என கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், இதுகுறித்து பதில் மனு தாக்கல் செய்யுமாறு மத்திய அரசு, தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில், மத்திய அரசு பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

இப்போது உள்ள சட்டத்தின்படி குற்றவியல் வழக்கில் தண்டனை பெற்ற அரசியல்வாதிகள், தண்டனை காலம் முடிந்த பிறகு 6 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது. அவர்கள் மீண்டும் குற்றச் செயலில் ஈடுபடுவதைத் தடுக்க இதுவே போதுமானது ஆகும்.

நியாயமான கொள்கைகளை கருத்தில் கொண்டுதான் தகுதிநீக்க காலம் தீர்மானிக்கப்படுகிறது. அவர்களுக்கு வாழ்நாள் தடை விதிப்பது என்பது மிகவும் கடுமையானதாக இருக்கும் என்ற காரணத்தால் அது த்விர்க்கப்பட்டது. இது தொடர்பான தற்போதைய சட்ட விதிகள் அரசியலமைப்பு ரீதியாக வலுவாக உள்ளன.

### நாடாளுமன்ற வரம்பு

மேலும் தண்டனை பெற்ற அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிட வாழ்நாள் தடை விதிப்பது பொருத்தமானதா இல்லையா என்பது குறித்து முடிவு செய்வது நாடாளுமன்ற வரம்புக்கு உட்பட்டது:

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றம் கடந்த 2013-ம் ஆண்டு வழங்கிய தீர்ப்பின்படி, குற்றவியல் வழக்கில் 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும் எம்.பி., எம்எல்ஏக்கள் உடனடியாக தகுதி நீக்கம் செய்யப்படுவர். மேலும் அவர்களின் தண்டனை காலம் முடிந்து விடுதலையான நாள் முதல் 6 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

Daily Thanthi
Dated: 27.02.2025

வாக்காளர் விழிப்புணர்வு பணி குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை:

# மீனாட்சி அம்மன் கோவிலில் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார் வழிபாடு

## ராமேசுவரத்திலும் தரிசனம் செய்தார்



மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார் சாமி தரிசனம் செய்துவிட்டு வந்தபோது எடுத்த படம்.

மதுரை, பிப்.27-

மதுரை மீனாட்சி அம்மன், ராமேசுவரம் கோவில்களில் இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார் தரிசனம் செய்தார்.

### தலைமை தேர்தல் கமிஷனர் வருகை

இந்திய தலைமை தேர்தல் கமிஷனராக ஞானேஷ்குமார் சில நாட்களுக்கு முன்பு பொறுப்பேற்றார். அவரும், அவருடைய மனைவியும் மதுரைக்கு நேற்று காலை விமானத்தில் வந்தனர். பின்னர், அழகர்கோவில் சாலையில் உள்ள அரசு சுற்றுலா மாளிகைக்கு சென்றனர்.

அங்கு தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார், அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டம் நடத்தினார்.

வாக்காளர் பட்டியல், வாக்கு மைய நிலை அலுவலர்கள் மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பாக மதுரை மாவட்டத்தில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், மதுரை மாவட்ட கலெக்டர் சங்கீதா, போலீஸ் கமிஷனர் லோகநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். கூட்டம் முடிந்த பின்னர் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

18 வயது நிறைவடைந்த இந்திய குடிமக்கள் அனைவரும் வாக்காளர்களாக மாற வேண்டும். ஓட்டளிப்பது ஜனநாயக கடமை.

வாக்களிப்பது குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. மதுரையில் தேர்தல் பணி சிறப்பாக உள்ளது. அதிகாரிகளும் நன்றாக செயல்படுகின்றனர். இந்திய தேர்தல் கமிஷன், வாக்காளர்கள் நலனுக்காக எப்போதும் செயல்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### மீனாட்சி அம்மன் கோவிலில் தரிசனம்

பின்னர் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார், மனைவியுடன் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சென்றார். கோவில் அதிகாரிகள், பட்டர்கள் அவரை வரவேற்று உள்ளே அழைத்துச்சென்றனர்.

மீனாட்சி அம்மன், சுந்தரேசுவரர் சன்னதிகளில் சாமி தரிசனம் செய்தனர். பின்னர் பொற்றாமரை குளம் பகுதியில் நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

பின்னர் அவரும், அவருடைய மனைவியும் கார் மூலம் ராமேசுவரம் சென்றனர்.

### ராமேசுவரம் கோவில்

அங்கு முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் மணிமண்டபத்துக்கு சென்று அவரது நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து கலாம் நினைவிடத்தில் உள்ள அரிய புகைப்படங்களையும், கலாமின் சிலைகளையும் பார்வையிட்டனர்.

அதன் பின்னர், அக்னி தீர்த்த கடலில் புனித நீராடிவிட்டு, ராமநாதசுவாமி கோவிலில் உள்ள 22 தீர்த்தக் கிணறுகளிலும் நீராடினர். இதையடுத்து விநாயகர், விசாலாட்சி, விசுவநாதர் சன்னதிகள், ராமநாத சுவாமி, பர்வதவர்த்தினி அம்பாள், ஆஞ்சநேயர் சன்னதிகளுக்கு சென்று தரிசனம் செய்தனர்.

Daily Thanthi
Dated: 27.02.2025

வருங்காலங்களில்

# 'சாதி, மதம், மொழிகளின் அடிப்படையில் அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிடமாட்டார்கள்'

## ஐகோர்ட்டு நம்பிக்கை

சென்னை, பிப்.27-

வருங்காலங்களில் சாதி, மதம், மொழி அடிப்படையில் அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிட மாட்டார்கள் என நம்புவதாக சென்னை ஐகோர்ட்டு கருத்து தெரிவித்துள்ளது.

சென்னை ஐகோர்ட்டில், வேலூர் சத்துவாச்சாரியைச் சேர்ந்த ராஜேஷ் அனூர் மகிமைதாஸ் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:-

### அரசியல் சுயலாபம்

சாதி, மதம், மொழி அடிப்படையில் வாக்கு சேகரிப்பில் ஈடுபடுவது என்பது ஊழல் நடவடிக்கை போல் ஆகும். அதனால், தேர்தலின்போது வெறுப்பு பேச்சுகளை கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று கடந்த 2017-ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

ஆனால் தேர்தல் நேரங்களில் மட்டுமல்லாமல், தேர்தல் அல்லாத நேரங்களிலும் அரசியல்வாதிகள் தங்களது அரசியல் சுய லாபத்துக்காக சாதி, மதம், மொழி ரீதியாக வாக்காளர்கள் மத்தியில் பிரிவினையைத் தூண்டுகின்றனர். இது ஜனநாயகத்துக்கும், அரசியலமைப்பு சட்டத்துக்கும் எதிரானது.

### விழிப்புணர்வு

நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் கடந்த பிறகும், அரசியல் கட்சிகள் நாட்டு மக்களிடம் பிரித்தாளும் கொள்கையை கடைபிடிப்பது சட்டவிரோதமானது. சாதி, மதம், மொழி ரீதியாக பிரிவினையை தூண்டும் நபர்கள் மீது தேர்தல் நேரங்களில் மட்டும் இந்திய தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கிறது. அதன்பின்னர், கண்டுகொள்வதில்லை. எனவே, சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு முறையாக அமல்படுத்தப்படுகிறதா? என்பதை கண்காணிக்க ஓய்வு பெற்ற நீதிபதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் அடங்கிய சுதந்திரமான ஆணையத்தையும் அமைக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### குழந்தை பருவம்

இந்த வழக்கிற்கு தேர்தல் ஆணையம் தாக்கல் செய்த பதில் மனுவில், "சாதி, மதம், மொழி அடிப்படையில் தேர்தல் நடைபெறவில்லை என்பதை உறுதிசெய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது" என்று கூறப்பட்டிருந்தது.

இந்தநிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், "இந்தியா போன்ற மக்கள் தொகை அதிகம் கொண்ட பெரிய நாட்டில் மாற்றத்தை ஒரே இரவில் கொண்டுவர முடியாது. மாற்றம் கொண்டுவர சில காலம் ஆகும்.

ஜனநாயகத்தில் இந்தியா அடியெடுத்துவைத்து 75 ஆண்டுகள் ஆகியிருந்தாலும், இன்னும் குழந்தை பருவத்தில் தான் உள்ளது. வருங்காலத்தில் பொதுமக்களும், அரசியல்வாதிகளும் சாதி, மதம், மொழி அடிப்படையில் தேர்தலில் போட்டியிடமாட்டார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். வழக்கை தள்ளுபடி செய்கிறோம்" என கருத்து தெரிவித்தனர்.

Dinamalar
Dated: 27.02.2025

# நிரந்தர தடை?

- தண்டனை பெற்ற தலைவர்கள் தேர்தலில் போட்டியிட
- கோர்ட்டுக்கு அதிகாரமில்லை என அரசு தரப்பு வாதம்

– டில்லி சிறப்பு நிருபர் –

**'கிரிமினல் வழக்குகளில் தண்டனை பெற்ற எம்.பி., – எம்.எல்.ஏ.,க்கள் தேர்தலில் போட்டியிட நிரந்தரமாக தடை விதிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை. அரசியல் சாசனப்படி அதை பார்லிமென்ட் தான் முடிவு செய்ய முடியும்' என, உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தரப்பு வாதத்தை முன்வைத்துள்ளது.**

எம்.பி.,க்கள், எம்.எல்.ஏ.,க்கள் குற்ற வழக்குகளில் தண்டனை பெற்றால், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951வது பிரிவின்படி, ஆறு ஆண்டுகள் வரை அவர்கள் தேர்தலில் போட்டியிட தடை இருக்கிறது.

ஆனால், இந்த சட்டத்தை மாற்றி வாழ்நாள் தடை விதிக்க அரசுக்கு உத்தரவிட வேண்டும் என, வழக்கறிஞர் அஸ்வினி உபாத்யாய் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

## விசாரணை

இந்த மனு மீதான விசாரணை, நீதிபதிகள் தீபங்கர் தத்தா, மன்மோகன் அடங்கிய அமர்வில் கடந்த 10ம் தேதி விசாரணைக்கு வந்தது. அப்போது, இது அரசியல் சாசனப் பிரிவு சார்ந்த விவகாரம் என்பதால், இதில் மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் நீதிமன்றத்திற்கு உதவ வேண்டும் என நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

அடுத்த மூன்று வாரத்தில் மத்திய அரசு மற்றும் தலைமை தேர்தல் கமிஷன், இந்த மனு மீது விரிவான பிரமாண பத்திரங்கள் தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தனர். இந்நிலையில், மத்திய அரசு இந்த விவகாரத்தில் தன் நிலைப்பாட்டை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்தது. அதன் விபரம்:

தண்டனை பெற்ற எம்.பி., – எம்.எல்.ஏ.,க்களின் தகுதி நீக்கம் தொடர்பான விவகாரங்களில் முடிவு செய்யும் அதிகாரம் பார்லிமென்டுக்கு மட்டுமே இருக்கிறது.

## தடை விதிப்பு

தற்போது, உள்ள ஆறு ஆண்டுகள் தடை என்பதே பொருத்தமானதாக உள்ளது. தண்டனை பெற்ற சட்டசபை மற்றும் பார்லி., உறுப்பினர்கள் சபைக்கு வருவதிலும் தற்காலிக தடையை ஏற்படுத்துகிறது. எனவே, தற்போது உள்ள நடைமுறையே போதுமானதாக இருக்கிறது.

அதை விடுத்து வாழ்நாள் தடை விதிப்பது என்பது மிகவும் கடுமையானதாக இருக்கும்.

இப்படி குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் தடை விதிப்பது, அரசியல் சாசனத்திற்கு விரோதமானதாக எங்கும் குறிப்பிடப்படவில்லை. அப்படி இருக்கும்போது இது உச்ச நீதிமன்றத்தின் வரம்புக்குள் வராது.

எனவே, இந்த வாழ்நாள் தடை கோரும் மனு மீது எந்த ஒரு நிவாரணத்தையும் உச்ச நீதிமன்றத்தால் வழங்க முடியாது.

தற்போது உள்ள அரசியல் சாசனத்தின் சட்டப்பிரிவு 102 மற்றும் 191 ஆகியவை, எம்.பி., – எம்.எல்.ஏ.,வை தகுதி நீக்கம் செய்வதற்கான அதிகாரங்களை பார்லிமென்டுக்கு வழங்கியுள்ளது. தேவைப்பட்டால் அதை நாங்கள் பயன்படுத்திக் கொள்வோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Dinamalar
Dated: 27.02.2025

# ஜாதி, மத ரீதியாக தேர்தலை சந்திக்கும் நடைமுறையில் மாற்றம் வரும்: ஐகோர்ட்

சென்னை, பிப். 27–

'ஜனநாயகத்தில் இந்தியா அடியெடுத்து வைத்து, 75 ஆண்டுகளானாலும், இன்னும் குழந்தைப் பருவத்தில் தான் நாடு உள்ளது. ஜாதி, மதம் அடிப்படையில், தேர்தலை சந்திக்கும் நடைமுறையில் மாற்றம் வரும்' என, சென்னை உயர் நீதிமன்றம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

வேலுார் மாவட்டம், சத்துவாச்சாரியைச் சேர்ந்த ராஜேஷ் அனுார் மகிமை தாஸ் தாக்கல் செய்த மனு:

தேர்தல் மற்றும் தேர்தல் அல்லாத காலங்களில், பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்படாத, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், மக்கள் பிரதிநிதிகள், அரசியல் லாபத்துக்காக, ஜாதி, மதம், மொழி ரீதியாக வாக்காளர்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்துகின்றனர்.



ஜாதி, மதம், மொழி ரீதியாக ஓட்டுகளை சேகரிப்பது என்பது ஊழல் நடவடிக்கை என, கடந்த 2017ம் ஆண்டு வழக்கு ஒன்றில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த தீர்ப்பை அமல்படுத்துவதை கண்காணிக்க, ஓய்வுபெற்ற நீதிபதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் அடங்கிய சுதந்திரமான ஆணையத்தை அமைக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனு, நீதிபதிகள் ஆர். சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு முன், விசாரணைக்கு வந்தது. அப்போது, தேர்தல் ஆணையம் தரப்பில், பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், 'தேர்தல் பிரசாரம், ஜாதி, மத அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதை உறுதி செய்ய, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன' என, தெரிவிக்கப்பட்டது.

இதை பதிவு செய்த நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

இந்தியா போன்ற பெரிய நாட்டில், ஒரே இரவில் மாற்றத்தைக் கொண்டு வந்துவிட முடியாது.

ஜனநாயகத்தில் இந்தியா அடியெடுத்து வைத்து, 75 ஆண்டுகள் ஆனாலும், இன்னும் குழந்தைப் பருவத்தில் தான் நாடு உள்ளது. இந்த மாற்றங்கள் ஏற்பட இன்னும் சில காலம் ஆகும்.

மக்களும், அரசியல்வாதிகளும், ஜாதி, மத அடிப்படையில் தேர்தலில் போட்டியிட மாட்டார்கள் என, நம்புகிறோம். மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Dinakaran

Dated: 27.02.2025

டெல்லியில் மார்ச் 4,5ல் ஆலோசனை

# தேர்தல் முறையில் சீர்திருத்தமா?

## இந்திய தலைமை தேர்தல் ஆணையர் பேட்டி



மதுரை, பிப். 27: வரும் மார்ச் 4, 5ம் தேதி டெல்லியில் அனைத்து தலைமை தேர்தல் அதிகாரிகள் கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் தேர்தல் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தெரிவித்தார்.

இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் நேற்று காலை மதுரை வந்தார். மீனாட்சியம்மன் கோயிலில் தரிசனம் செய்த அவர், அழகர்கோவில் ரோட்டில் உள்ள அரசு விருந்தினர் மாளிகை மற்றும் ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த வாக்காளர் பட்டியல் திருத்தம், புதிய வாக்காளர்கள் சேர்த்தல், வாக்குச்சாவடி அலுவலர் பணி, வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பான ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றார். கூட்டத்தில் தமிழக தலைமை தேர்தல் ஆணையர் அர்ச்சனா பட்நாயக் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். பின்னர் அவர் அளித்த பேட்டியில், "மார்ச் 4 மற்றும் 5ம் தேதி டெல்லியில் அனைத்து தலைமை தேர்தல் அதிகாரிகள் கூட்டம் நடக்க உள்ளது. இதில் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் ஒரு மாநில தேர்தல் அதிகாரி, ஒரு மாவட்ட தேர்தல் அலுவலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, கலந்துகொள்வார்கள். இதில் தேர்தல் செயல்முறைகள் தொடர்பாக எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் முடிவுகள் எடுக்கப்படும். குறிப்பாக வாக்காளர்கள் எளிமையாக வாக்களிக்கும் வகையில் சில நடைமுறைகள் மேற்கொள்ளப்படும்" என்றார்.

**கலாம் நினைவிடத்தில் மரியாதை:** ராமநாதபுரத்தில் ஆலோசனைக் கூட்டத்தை முடித்த பின் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் குடும்பத்தினருடன் நேற்று மாலை ராமேஸ்வரம் வந்தார். அங்கு பேக்கரும்பில் உள்ள முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் தேசிய நினைவிடம் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து ராமநாதசுவாமி கோயில் உள்ளே 22 புண்ணிய தீர்த்தங்களில் நீராடி சிறப்பு அபிஷேக பூஜையுடன் சுவாமி தரிசனம் செய்தார்.

Dinakaran

Dated: 27.02.2025

### சாதி மற்றும் மத அடிப்படையில்

# அரசியல்வாதிகள் தேர்தலை சந்திக்கும் நடைமுறையில் மாற்றம் வரும்

### ஐகோர்ட் நம்பிக்கை

சென்னை, பிப். 27: சாதி மத அடிப்படையில் அரசியல்வாதிகள் தேர்தலை சந்திக்கும் நடைமுறையில் மாற்றம் வரும் என்று சென்னை உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

சாதி, மதம் மற்றும் மொழி ரீதியாக வாக்குகளை சேகரிப்பது ஊழல் நடவடிக்கை என்று கடந்த 2017 ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. தேர்தல் நேரங்களிலும், தேர்தல் அல்லாத காலங்களிலும் பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்படாத, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள், அரசியல் லாபத்துக்காக சாதி, மதம், மொழி ரீதியாக வாக்காளர்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்துவதாக கூறி வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியைச் சேர்ந்த ராஜேஷ் அனுரார் மகிமைதாஸ் என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். அவரது மனுவில், உச்ச நீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்துவதைக் கண்காணிக்க, ஓய்வு பெற்ற நீதிபதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் அடங்கிய சுதந்திரமான ஆணையத்தை அமைக்குமாறு உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, தேர்தல் ஆணையம் தாக்கல் செய்த பதில் மனுவில், தேர்தல் பிரசாரம், சாதி மத அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் பதில் மனுவை பதிவு செய்து கொண்டு மனுவை தள்ளுபடி செய்த நீதிபதிகள், இந்தியா போன்ற பெரிய நாட்டில் மாற்றத்தை ஒரே இரவில் கொண்டு வரமுடியாது. ஜனநாயகத்தில் இந்தியா அடியெடுத்துவைத்து 75 ஆண்டுகள் ஆனாலும் இன்னும் குழந்தை பருவத்தில் தான் இந்தியா இருக்கிறது. இந்த மாற்றங்கள் ஏற்பட இன்னும் சில காலம் ஆகும். குடிமக்களும், அரசியல்வாதிகளும் சாதி மத அடிப்படையில் தேர்தலில் போட்டியிட மாட்டார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தனர்.

Dinakaran

Dated: 27.02.2025

கிரிமினல் குற்ற வழக்கில் ஈடுபடும்

# எம்பி, எம்எல்ஏக்கள் போட்டியிட நிரந்தர தடை விதிக்க முடியாது

## உச்ச நீதிமன்றத்தில் ஒன்றிய அரசு பிரமாணப் பத்திரம் தாக்கல்

புதுடெல்லி, பிப்.27: கிரிமினல் குற்ற வழக்கில் ஈடுபடும் எம்.பி, எம்.எல்.ஏக்கள் தேர்தலில் நிற்பதற்கு நிரந்தர தடை விதிக்க முடியாது என்று தெரிவித்துள்ள ஒன்றிய அரசு, இந்த விவகாரம் நாடாளுமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வருகிறது என்று உச்ச நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞர் அஸ்வினி உபாத்யா என்பவர் கடந்த 2017ம் ஆண்டு ஒரு பொது நல மனுவை தாக்கல் செய்திருந்தார். அதில், "அரசு மற்றும் நீதித்துறை பணிகளில் உள்ள ஒருவர் குற்ற வழக்கில் தண்டிக்கப்பட்டால் வாழ்நாள் முழுவதும் அவர்கள் தொடர்ந்து பணியாற்ற அரசால் தடை விதிக்கப்படுகிறது. ஆனால் கிரிமினல் குற்ற வழக்கில் அரசியல்வாதிகள் எம்பி, எம்.எல்.ஏக்கள் தண்டிக்கப்படுகிறபோது, தண்டனை முடிந்து 6 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டால் அவர்கள் எம்.எல்.ஏ மற்றும் அமைச்சராக கூட பதவி வகிக்க முடியும். எனவே அப்படிபட்டவர்கள் தேர்தலில் நிற்க வாழ்நாள் தடை விதிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இதையடுத்து மேற்கண்ட வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் திபங்கர் தத்தா மற்றும் மன்மோகன் ஆகியோர் அமர்வு, இந்த விவகாரத்தில் ஒன்றிய அரசு மற்றும் இந்திய தலைமை தேர்தல் ஆணையம் ஆகியோர் மூன்று வாரத்தில் பதிலளிக்க வேண்டும் என்று கடந்த 10ம் தேதி உத்தரவிட்டிருந்தனர்.

இந்த நிலையில் வழக்கு தொடர்பாக ஒன்றிய அரசு உச்ச நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்துள்ளது. அதில், "குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட அரசியல்வாதிகளுக்கு வாழ்நாள் தடை விதிக்க வேண்டும் என்பதை ஏற்க முடியாது. அத்தகைய தகுதி நீக்கம் என்பது நாடாளுமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது ஆகும். இந்த மனு சட்டத்தை மீண்டும் எழுத அல்லது நாடாளுமன்றத்தை ஒரு குறிப்பிட்ட முறையில் சட்டம் இயற்றுமாறு வழிநடத்த முயற்சிப்பது போன்று உள்ளது. இது நீதித்துறை மறுஆய்வின் எல்லைக்கு அப்பாற்பட்டது. குறிப்பாக இந்த விவகாரத்தில் வாழ்நாள் தடை பொருத்தமானதா அல்லது இல்லையா என்பது நாடாளுமன்றத்தின் அதிகார வரம்பிற்கு மட்டுமே உட்பட்டதாகும். அதேப்போன்று தண்டனைகளின் கால அளவைக் கட்டுப்படுத்துவது அதிகப்படியான கடுமையைத் தடுக்கும் என்றாலும், அதனை ஏற்க முடியாது.



கடந்த 1951ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 8(1)ன் படி, தகுதி நீக்கம் தண்டனை விதிக்கப்பட்ட நாளிலிருந்து ஆறு ஆண்டுகள் அல்லது சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளில், விடுவிக்கப்பட்ட நாளிலிருந்து ஆறு ஆண்டுகள் வரை தான் நீடிக்கும்.

மேலும் குற்றச்சாட்டுக்குள்ளான பிரிவுகளின் கீழ் செய்யப்படும் தகுதி நீக்கங்கள் நாடாளுமன்றக் கொள்கையின் அடிப்படையில் காலத்தால் வரையறுக்கப்பட்டுள்ளன. இதில் மனுதாரர் கோரியபடி வாழ்நாள் தடையை விதிப்பது என்பது கண்டிப்பாக பொருத்தமானதாக இருக்காது. அவரது கோரிக்கையை உச்ச நீதிமன்றம் ஏற்கக் கூடாது. இவ்வாறு அதிக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Dinamani, Dated: 27-02-2025

# வாக்காளர்களுக்கு தேர்தல் ஆணையம் உறுதுணையாக இருக்கும்

## தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார்



மதுரையில் புதன்கிழமை நடைபெற்ற தேர்தல் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் பேசிய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார். உடன், தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உள்ளிட்டோர்.

மதுரை, பிப். 26: வாக்காளர்கள் தங்களது ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற தேர்தல் ஆணையம் உறுதுணையாக இருக்கும் என தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தெரிவித்தார்.

மதுரையில்மாவட்டதேர்தல்பணிகள் குறித்த அரசுத் துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பங்கேற்று, தேர்தல் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், மதுரை மாவட்ட ஆட்சியர் மா.சௌ. சங்கீதா, மாநகரக் காவல் ஆணையர் ஜே. லோகநாதன், மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயன், கூடுதல் ஆட்சியர் மோனிகா ராணா, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் பி.கே. அரவிந்த், மாவட்ட வருவாய் அலுவலர் நா. ராகவேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்துக்குப் பிறகு, செய்தியாளர்களிடம் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் கூறியதாவது: தேசிய சேவை என்பதன் முதல் படியே வாக்கு செலுத்துவதுதான். 18 வயது நிறைவடைந்த அனைவரும் தேர்தலில் வாக்களிக்க வேண்டும். வாக்காளர்கள் தங்களது ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற இந்திய தேர்தல் ஆணையம் உறுதுணையாக இருக்கும் என்றார் அவர்.

**சுவாமி தரிசனம்:** இதையடுத்து, மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் அவர் சுவாமி தரிசனம் செய்தார். பிறகு, ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரத்துக்குச் சென்று, முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலில் அவர் சுவாமி தரிசனம் செய்தார்.